

▲ சென்னை அண்ணாசாலை டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து மெட்ரோ ரயில் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ் குமார் பன்சல், இயக்குநர் திரிவேதி, தலைமைப் பொதுமேலாளர் வி.கே.சிங் உள்ளிட்டோர்.

## டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே

# மெட்ரோ ரயில் வெற்றிகரமாக சோதனை

● அமைச்சர் எம்.சி.சம்பத், அதிகாரிகள் ஆய்வு

■ சென்னை

சென்னை அண்ணாசாலை டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நேற்று வெற்றிகரமாக நடந்தது. மெட்ரோ ரயில் மற்றும் ரயில் நிலையங்களில் அமைச்சர் எம்.சி.சம்பத் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னையில் அடுத்தகட்டமாக அண்ணாசாலை டிஎம்எஸ், சென்ட்ரல் வழியாக வண்ணாரப்பேட்டை வரை 9.5 கி.மீ தூரம் சுரங்கப் பாதை வழியாக மெட்ரோ ரயில் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த வழித்தடத்தில் ஆயிரம் விளக்கு, எல்ஐசி, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை சென்ட்ரல், மண்ணடி மற்றும் வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின்தடங்கள் அமைத்து, சிக்னல் அமைத்தல் மற்றும் மின்இணைப்பு பணிகளும் நிறைவடைந்துள்ளன. இதற்கான பல்வேறு கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், இந்த தடத்தில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நேற்று தொடங்கியது. மெட்ரோ ரயிலில் தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ் குமார் பன்சல், மற்றும் இயக்குநர் திரிவேதி (திட்டங்கள்), இயக்குநர் நரசிம்ம பிரசாத் (இயக்கம்), தலைமைப் பொதுமேலாளர் வி.கே.சிங் மற்றும் உயர் அலுவலர்கள் பயணம் செய்து ஆய்வு செய்தனர்.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகளிடம் கேட்டபோது, "டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை வரையில் மெட்ரோ ரயில்களை இயக்கி சோதனை ஓட்டம் தொடங்கி வெற்றிகரமாக முடித்துள்ளோம். இந்த மாதம் இறுதி வரையில் படிப்படியாக வேகம் அதிகரித்து சோதனை நடத்தப்படும். அதன்பிறகு, ரயில்வே பாதுகாப்பு ஆணையர் தலைமையிலான குழு வந்து ஆய்வு நடத்தி ஒப்புதல் அளிக்கும். வரும் ஜனவரியில் இந்த தடத்தில் மெட்ரோ ரயில்சேவையை தொடங்கவுள்ளோம்'' என்றனர்.